# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2352 - 2023 සැප්තැම්බර් මස 27 වැනි බදාදා - 2023.09.27

*2352 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2016* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2036* |


**கவனிக்க.**-தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் சட்டமூலம் 2023, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2013-B 82499-5,441 (2023/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழிமூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி – மட்டக்களப்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2023, செத்தெம்பர் 13.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மட்டக்களப்பு | மண்முனை மேற்கு, வவுணதீவு | மகிழவட்டவான் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மண்முனை மேற்கு பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மட்டக்களப்பு. |

09-423

---

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

## கெடெற் அதிகாரிகள் மற்றும் மாணவ பொலிஸ் அதிகாரி பட்டப்பயில் நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கு வளாகத்தில் கெடெற் அதிகாரிகளுக்கான பட்டக் கற்கை நெறிகளுக்கு (Undergraduate Cadetships) 2021 இல் க.பொ.த. (உ./த.) தோற்றிய (MBBS பட்டம் தவிர்ந்த), 2022 இல் க.பொ.த. (உ./த.) தோற்றி பெறுபேறுகள் கிடைத்த (2023 இல் பெப்புருவரி நடந்த), 2022 மற்றும் 2023 இல் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் (உ./த.) தோற்றி முடிவு கிடைத்த பொருத்தமான தகைமையுடைய இலங்கையர்களிடமிருந்து 25.09.2023 ஆந் திகதி முதல் 18.10.2023 ஆந் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்து தகுதியான விண்ணப்பதாரர்களும் ஆரம்ப மருத்துவப் பரிசோதனை மற்றும் எழுத்துப்பரீட்சைகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

2022 G.C.E A/L வெளியீட்டு முடிவுகளின் பின் தேவையான குறைந்தபட்ச A/L முடிவுகளை பூர்த்தி செய்து மேற்கொண்ட மதிப்பீடுகளில் இருந்து தகுதி பெறும் விண்ணப்பதாரர்கள் முதற்கட்ட நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

2. கெடெற் அதிகாரிகளில், பட்டப்பயில் நெறிகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்து முப்படை அதிகாரிகளாக நிலையுயர்தப்பட்டவர்களுக்கு, 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் இரத்மலானையினால் பின்வரும் பட்டக்கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் பட்டம் (MBBS) (5 ஆண்டுகள்)
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
iii. சட்டவியலில் பட்டம் (4 ஆண்டுகள்)
iv. கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம். (4 ஆண்டுகள்)
v. கணினி பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம். (4 ஆண்டுகள்)
vi. மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம். (4 ஆண்டுகள்)
vii. தரவு விஞ்ஞானம் மற்றும் வியாபார பகுப்பாய்வு விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
viii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
ix. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
x. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
xi. பிரயோக தரவு விஞ்ஞான தொடர்பாடல் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
xii. பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப் பட்டம் (TESOL) (3 ஆண்டுகள்)
xiii. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
xiv. பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)
xv. குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம் (3 ஆண்டுகள்)

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் சூரியவெவ தெற்கு வளாகத்தினால் பின்வரும் பட்டக்கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன.

i. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5 ஆண்டுகள்)
ii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
iii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
iv. தகவல் தொழிநுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
v. தகவல் முறைமை விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)
vi. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளங்கலை சிறப்புப் பட்டம் (4 ஆண்டுகள்)

- தேர்ந்தெடுக்கப்பட்ட கெடெற் அதிகாரிகள் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள் தொடங்குவதற்கு முன்பாக அல்லது அதன் பின்னர் பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட காலத்திற்கு கட்டாய விவேக இராணுவ பாடத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

3.1. பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் கெடெற் அதிகாரிகளுக்கான ஒதுக்கீடானது அப்படை பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேர்முகப்பரீட்சைகளில் அபேட்சகர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் கெடெற் அதிகாரிகள் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவதுடன் மேலதிகாரிகளாக நிலையுயர்த்தப்படுவர்.

3.2 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற கெடெற் அதிகாரிகளுக்கு பின்வரும் பட்டங்கள் வழங்கப்படும்.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் பட்டம் (MBBS)
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
iii. சட்டவியலில் பட்டம்
iv. கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்.
v. கணினி பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்.
vi. மென்பொருள் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்.
vii. தரவு விஞ்ஞானம் மற்றும் வியாபார பகுப்பாய்வு விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
viii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம்
ix. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி பட்டம்
x. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி பட்டம்
xi. பிரயோக தரவு விஞ்ஞான தொடர்பாடல் விஞ்ஞானமாணி பட்டம்
xii. பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்டம் (TESOL)
xiii. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி பட்டம்
xiv. பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம்
xv. குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம்
xvi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம்
xvii. கனிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xviii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்
xix. தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
xx. தகவல் முறைமை விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்
xxi. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தொழிநுட்ப இளங்கலை சிறப்புப்பட்டம்

3.3. சகல பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

a. **மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி (MBBS) - ஐந்து ஆண்டுகள் (ஆண், பெண்)**

2022 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் **உயிரியல் விஞ்ஞானப் பிரிவில்** (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியல்) என்பவற்றை கற்று உயிரியல், இரசாயனவியலில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச்

சித்திகளும் (C) பௌதீகவியலில் ஒரு சாதாரண (S) சித்தியும் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல், அல்லது கேம்பிறிட்ஜ் / எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று திறமைச் சித்தியை (C) கொண்டிருத்தல்.

பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டு அல்லது அதற்கு நேர் முன்னைய ஆண்டின் உயர்தராதர பரீட்சை முடிவுகள் MBBS கற்கை நெறிகளுக்கு கருத்திலெடுக்கப்படும். எவ்வாறாயினும், கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளில் நடப்பாண்டிற்கு நேர் முன்னைய ஆண்டின் (2021) உயர்தராதர பரீட்சை முடிவுகள் 17 வயதில் முடித்திருந்தால் மட்டுமே கருத்திலெடுக்கப்படும்.

b. **விமான இயந்திரவியல்/விமானம்சார் கற்கை/உயிரியல் மருத்துவம் /சிவில் /மின் மற்றும் இலத்திரனியல்/ இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார் / பொறிமுறையெந்திரவியல் / எந்திர இலத்திரனியல் /கடற்படை கட்டிடக்கலை /கட்டிட சேவைகள் பொறியியல் என்பவற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள், (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் **கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்)** என்பவற்றை கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் (C) ஒரு சாதாரண (S) சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 / 2023 ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு அதிதிறமைச் சித்திகள் (B) மற்றும் ஒரு திறமைச் சித்தியை (C) கொண்டிருத்தல். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

c. **சட்டவியலில் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணித, விஞ்ஞான, வணிக அல்லது கலை பிரிவில் கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் (C) ஒரு சாதாரண (S) சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆண்டில் கேம்பிறிட்ஜ் / எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று திறமைச் சித்திகள் (C) பின்வரும் ஏதாவது மூன்று பாடத்தில் பெற்றிருத்தல்.

**விண்ணப்பதாரர்கள் பின்வரும் பட்டியலில் இருந்து குறைந்தது ஒரு பாடத்தையாவது பின்பற்றியிருக்க வேண்டும்:**

| | | |
|---|---|---|
| கணக்கியல் | உயிரியல் | விவசாய விஞ்ஞானம் |
| புவியியல் | உளவியல் | உயர் கணிதம் |
| வணிக புள்ளிவிபரவியல் | சட்டவியல் | வணிக கற்கைகள் |
| அளவையியலும் விஞ்ஞான முறையும் | வரலாறு | பொருளியல் |
| பௌதீகவியல் | இரசாயனவியல் | கணினி விஞ்ஞானம் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும் | | சமூகவியல் |
| கணிதவியல் / இணைந்த கணிதம் | அரசியல் அறிவியலின் கூறுகள் | |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |

**அத்துடன்**

**பின்வரும் பட்டியலில் இருந்து அதிகபட்சம் இரண்டு பாடத்தையாவது பின்பற்றியிருக்க வேண்டும்:**

| | | |
|---|---|---|
| பௌத்தம் /பௌத்த நாகரிகம் | ஸ்பானிய மொழி | தமிழ் |
| கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம் | இந்து சமயம் / இந்து நாகரிகம் | சமஸ்கிருதம் |
| கிரேக்க உரோம நாகரிகம் | இஸ்லாம் /இஸ்லாமிய நாகரிகம் | பிராஞ்சிய மொழி |
| ஜப்பான் மொழி | சீன மொழி | சிங்களம் |
| ஆங்கிலம் | பாளி | அராபிய மொழி |
| ஜேர்மன் மொழி | ஆங்கில இலக்கியம் | |
| பாரம்பரிய கற்கைகள் | பூலோக நோக்கலும் ஆராய்ச்சியும் | |

பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா./த.) இல் சிங்களம்/தமிழில் குறைந்தபட்சம் ஒரு திறமைச்சித்தியையாவது பெற்றிருத்தல் வேண்டும்.

d. **கணினி விஞ்ஞான விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம். - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரன சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் இணைந்த கணிதம் பௌதீகவியல் மற்றும் பின்வரும் பட்டியலில் ஏதாவது ஒரு பாடத்தில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

e. **மென்பொருள் பொறியியல்மாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரன சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் பின்வரும் பட்டியலில் ஏதாவது ஒரு பாடத்தில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

f. **கணினி பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் பின்வரும் பட்டியலில் ஏதாவது ஒரு பாடத்தில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்ற தாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

g. **தரவு விஞ்ஞானம் மற்றும் வியாபார பகுப்பாய்வு விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று (இணைந்த கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல்) குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

h. **தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம் அல்லது வர்த்தகப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரன சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

i. **முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் அல்லது கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ் /எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

j. **சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

k. **பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப் பட்டம் (TESOL) - மூன்று ஆண்டுகள் (ஆண், பெண்)**

*2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் "B" சித்தி பெற்றிருக்க வேண்டும்.*

l. **பிரயோக தரவு விஞ்ஞான தொடர்பாடல் விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்)**

*2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/ எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும். கலைப் பிரிவு மாணவர்கள் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிப்பதற்கு புள்ளிவிபரவியலை மற்றும் அல்லது பொருளியலை பாடமாக /பாடங்களாக கற்றிருக்க வேண்டும்.*

m. **தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்)**

*2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்த பிரிவிலாவது கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

n. **பொலிஸ் அறிவியலில் விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்)**

*2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

**பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் பட்டியல் (அ) இலிருந்து மூன்று பாடங்களில் அல்லது இரண்டு பாடங்களும் அல்லது ஏதாவது ஒரு பாடத்தை பட்டியல் (ஆ) இலிருந்தும் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.**

***பட்டியல் (அ)***

| | |
|---|---|
| *கணக்கியல்* | *பௌதீகவியல்* |
| *புவியியல்* | *கணிதவியல் /இணைந்த கணிதம்* |
| *வணிக புள்ளிவிபரவியல்* | *தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்* |
| *அளவையியலும் விஞ்ஞான முறையும்* | *விவசாய விஞ்ஞானம்* |
| *இரசாயனவியல்* | *உயர் கணிதம்* |
| *தொடர்பாடலும் ஊடக கற்கைகளும்* | *வணிக கற்கைகள்* |
| *அரசறிவியல்* | *பொருளியல்* |
| *உயிரியல்* | *சட்டவியல்* |
| *வரலாறு* | |

***பட்டியல் (ஆ)***

| | |
|---|---|
| *பௌத்தம் /பௌத்த நாகரிகம்* | *இஸ்லாம் /இஸ்லாமிய நாகரிகம்* |
| *கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம்* | *சீன மொழி,* |
| *கிரேக்க உரோம நாகரிகம்* | *பாளி* |
| *ஜப்பான் மொழி* | *ஜேர்மன் மொழி* |
| *ஆங்கிலம் (பாட எண்: 73)* | *தமிழ்* |
| *சமஸ்கிருதம்* | *பிராஞ்சிய மொழி* |
| *இந்து சமயம் /இந்து நாகரிகம்* | *சிங்களம்* |
| *விவசாய தொழில்நுட்பம்* | *அராபிய மொழி* |

***அத்துடன்***

*விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.*

o. ***குற்றவியல் மற்றும் குற்றவியல் நீதியில் விஞ்ஞானமாணி பட்டம் - மூன்று ஆண்டுகள் (ஆண்)***

*2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

**பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் பட்டியல் (அ) இலிருந்து மூன்று பாடங்களில் அல்லது இரண்டு பாடங்களும் அல்லது ஏதாவது ஒரு பாடத்தை பட்டியல் (ஆ) இலிருந்தும் சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும்.**

**பட்டியல் (அ)**

கணக்கியல்
புவியியல்
வணிக புள்ளிவிபரவியல்
அளவையியலும் விஞ்ஞான முறையும்
இரசாயனவியல்
தொடர்பாடலும் ஊடக கற்கைகளும்
அரசறிவியல்
உயிரியல்
வரலாறு
பௌதீகவியல்
கணிதவியல் /இணைந்த கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்
விவசாய விஞ்ஞானம்
உயர் கணிதம்
வணிக கற்கைகள்
பொருளியல்
சட்டவியல்

**பட்டியல் (ஆ)**

பௌத்தம் /பௌத்த நாகரிகம்,
கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம்
கிரேக்க உரோம நாகரிகம்
ஜப்பான் மொழி
ஆங்கிலம் (பாட எண்: 73)
சமஸ்கிருதம்
இந்து சமயம் /இந்து நாகரிகம்
விவசாய தொழில்நுட்பம்
இஸ்லாம் /இஸ்லாமிய நாகரிகம்
சீன மொழி,
பாளி
ஜேர்மன் மொழி
தமிழ்
பிராஞ்சிய மொழி
சிங்களம்
அராபிய மொழி

**அத்துடன்**

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் சிங்களத்தில்/தமிழில் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் வேண்டும்.

p. ***கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (B Arch) - ஐந்து வருடங்கள் (ஆண், பெண்)***

*2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.*

i. பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம்,
உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதீகவியல்
இணைந்த கணிதம்
சித்திரம்
புவியியல்

**அத்துடன்**

ii. எஞ்சியிருக்கும் பாடம் /பாடங்கள் பின்வரும் பட்டியிலிலுள்ளன,

கணக்கியல்
இந்து நாகரிகம்
வணிக புள்ளிவிபரவியல்
இஸ்லாமிய நாகரிகம்
கிரேக்க உரோம நாகரிகம்
அரசறிவியல்
அளவையியலும் விஞ்ஞான முறையும்
கணிதவியல்
சமஸ்கிருதம்
ஜேர்மன் மொழி
அரபிய மொழி
வரலாறு

ஆங்கிலம் (பாட எண்: 73)
சிங்களம்
கிறிஸ்தவ நாகரிகம்
தொடர்பாடலும் ஊடக கற்கைகளும்
ஹிந்தி
பௌத்த நாகரிகம்
மனைப்பொருளியல்
விவசாய விஞ்ஞானம்
சீன மொழி
வியாபாரக் கற்கைகள்
ஜப்பான் மொழி
பொருளியல்
பாளி
பிராஞ்சிய மொழி
தமிழ்
தகவல் மற்றும் தொடர்பாடல்
தொழில்நுட்பம்

**அத்துடன்**

iii. க.பொ.த (சா./த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச்சித்தி (C) அல்லது க.பொ.த (உ./த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி (S) அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதத்தில் சாதாரண (D) அல்லது அதற்குச் சமமான சித்தி.

iv. கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படுகின்ற 'வெளி அறிகைநிலை' எனும் பரீட்சையில் சித்தி.

q. **கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப்பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

**பின்வரும் பாடங்களில் ஆகக் குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி,**

இணைந்த கணிதம் /உயர் கணிதம்

**அத்துடன்**

**கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடம் /பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்**

கணக்கியல்
வணிகப் புள்ளிவிபரவியல்
வியாபாரக் கற்கைகள்
தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம்
பொருளியல்
பௌதிகவியல்
இரசாயனவியல்

**இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.**

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கணித பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் (C) சித்தி மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண (S) சித்தி

**அல்லது**

கேம்பிறிட்ஜ் / எடெக்செல் சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞான பாடத்தில் சாதாரண (D) சித்தி அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு (சா./த.) பரீட்சையில் சித்தி.

r. **அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப்பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல்

உயர்தரத்தில் இணைந்த கணிதம், பௌதிகவியல் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பின்வரும் பட்டியலிலுள்ள பாடங்களில் பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளில் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

s. **தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண், பெண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று ''D'' சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

t. **தகவல் முறைமை விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல், கணிதம், வர்த்தகம் அல்லது கலைப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண சித்திகளை (S) பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியடைந்திருத்தல் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளில் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

u. **தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தொழில்நுட்ப இளங்கலை சிறப்புப்பட்டம் - நான்கு ஆண்டுகள் (ஆண்)**

2021 அல்லது 2022 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானப் பிரிவில் (இணைந்த கணிதம், பௌதிகவியல் இரசாயனவியல்), உயிரியல் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) அல்லது தொழில்நுட்ப பிரிவில் (எப்பாடங்கள் கலப்பிலும்) குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் அல்லது 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/எடெக்செல் உயர்தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆகக் குறைந்தது மூன்று "D" சித்திகளை பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகள் ஒரே அமர்வில் பெற்றதாகவும் மூன்று முயற்சிகளுக்குள் பெற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட கெடெற் அதிகாரிகள் (Officer Cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்கு மேலதிகமாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களை கட்டாயமாக பயிலுதல் வேண்டும்.

3.6 அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின் போது உடல்வாண்மை விருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

4. a. **கெடெற் (Officer Cadets) அதிகாரிகள் மற்றும் மாணவ பொலிஸ் அதிகாரிகளுக்கு தேவையான அடிப்படைத் தகைமைகள்:**

**விண்ணப்பதாரிகள்:**

i. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்;
ii. 2023.10.18 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 2023.10.01 ஆந் திகதியன்று 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்;
iii. க.பொ.த. (உ./த.) பொது அறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் (குறைந்தது 30 புள்ளிகள்) வேண்டும்;
iv. இலங்கையில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்;
v. திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் (எந்தவொரு கெடெற் அதிகாரியும் பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதுடன் படை சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்)

b. ***ஏனைய தகைமைகள்*:**

i. க.பொ.த (உ./த.) 2021ல் தோற்றி (MBBS தவிர்ந்த), 2022 க.பொ.த (உ./த.) பரீட்சையின் (2023 இல் நடந்த) முடிவுக்காக காத்திருக்கும் விண்ணப்பதாரிகள் மற்றும் 2022 அல்லது 2023 ஆம் ஆண்டில் கேம்பிறிட்ஜ்/ எடெக்செல் உயர்தரத்தில் தோற்றி முடிவு கிடைத்த அல்லது அதற்கு சமமான பரீட்சையில் தோற்றியோர் விண்ணப்பிக்க தகுதியுடையவராவார்.

ii. அனைத்து கற்கைகளுக்கும் (TESOL தவிர்ந்த) ஆங்கில மொழி பாடத்தில் க.பொ.த (சா./த.) பரீட்சையில் அல்லது கேம்பிறிட்ஜ்/எடெக்செல் சாதாரண தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும். பிற மொழிகளை பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் இளங்கலைப்பட்ட (TESOL) கற்கைக்கு பரீட்சார்த்தி க.பொ.த. (சா./த.) பரீட்சையில் அல்லது கேம்பிறிட்ஜ் / எடெக்செல் சாதாரண தரத்தில் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஆங்கிலத்தில் அதிதிறமைச் சித்தியைப் (B) பெற்றிருத்தல் வேண்டும்.

iii. *இலங்கை வான்படைக்குரிய கல்வித் தகைமைகள்*:
க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்பற்றில் திறமைச் சித்தியும் (C) சிங்களம் அல்லது தமிழில் சாதாரண சித்தியும் (S) அல்லது அதற்கு மேற்பட்ட சித்தியும் அடங்கலாக குறைந்தபட்சம் ஒரு அமர்வில் ஆறு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் தெரிவுப் பாடங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது).

iv. கேம்பிறிட்ஜ்/எடெக்செல் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு தகைமைகளைக் கொண்டிருக்கிற விண்ணப்பதாரிகள் இலங்கை க.பொ.த (சா./த.) தர பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தியைக் (C) கொண்டிருத்தல் வேண்டும். (தெரிவுசெய்யப்பட்ட பாடநெறிகளுக்கு மட்டும்) அவ்வாறு விண்ணப்பம் சமர்ப்பிக்கின்றபோது க.பொ.த (சா./த.) தர பரீட்சையில் தோற்றாத விண்ணப்பதாரிகள் கெடெற் அதிகாரியாக சேர்க்கப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் க.பொ.த (சா./த.) தர பரீட்சையை பூர்த்திசெய்து சிங்களம் அல்லது தமிழ் மொழியில் திறமைச் சித்தியைப் (C) பெறுதல் வேண்டும். இத்தேவையை குறித்த காலப்பகுதியில் பூர்த்தி செய்யத் தவறும் விண்ணப்பதாரி அவரது சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

c. **குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:**

| | | *இராணுவம்* | | *கடற்படை* | | *வான்படை* | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* | *ஆண்* | *பெண்* |
| *உயரம்* | MBBS | 5' 6" | 5' 3" | 168 cm | 160 cm | 5' 5'' (165 cm) | 5' 3'' (160 cm) |
| | *ஏனைய பட்டங்கள்* | 5' 6" | 5' 3" | 168 cm (171 cm for Provost Branch) | 160 cm (163 cm for Provost Branch) | 5'6'' (167.5 cm) | 5'4'' (162.5 cm) |
| ***நிறை*** | | 50 Kg | - | 52 Kg | 41 Kg | - | - |
| **BMI** | | - | - | - | - | <26 and >17 | <25 and >17 |
| ***மார்பு*** | | 32" (விரிவடையாதது) | - | 81 cm | - | 32" (81 cm) | - |

**பார்வை**

| | | இராணுவம் | | | கடற்படை | | | வான்படை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | L | R | CP | L | R | CV | L | R | CP |
| தொழில்முறை வகை | கண்ணாடி இன்றி | 6/18 | 6/18 | CP 2 | 6/18 | 6/18 | 24/24 By Ishihara's plates | 6/18 | 6/18 | CP 2 |
| | திருத்தப்பட்ட பார்ல்வ | 6/6 | 6/6 | CP 2 | - | - | - | 6/6 | 6/6 | CP 2 |
| | கண்ணாடி உடன் | - | - | - | 6/6 | 6/6 | 24/24 By Ishihara's plates | - | - | - |
| | அண்மைய பார்வை | - | - | - | J – 01 (Sinhala) N – 08 (English) | | | - | - | - |
| ஏனைய வகை | கண்ணாடி இன்றி | 6/9 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 | 6/6 | 6/6 | CP 2 |

*பார்வைத் திருத்தம் அல்லது மேம்படுத்தல் செயல்முறைக்காக கண் அறுவை சிகிச்சை செய்துகொண்ட விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களின் இறுதித் தேதிக்குள் ஆறு (06) மாதங்கள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

d. **தொழில்முறை வகையில் உள்ளடங்கும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| சேவை | பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் |
|---|---|
| இராணுவம் | மருத்துவம் (MBBS), பொறியியல் BSc Eng |
| கடற்படை | மருத்துவம் (MBBS) |
| வான்படை | மருத்துவம் (MBBS) |

**ஏனைய வகையில் உள்ளடங்கும் கற்கை நெறிகள்**

- மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்படாத ஏனைய அனைத்து கற்கை நெறிகளும்

**விசேட குறிப்பு**:

* ஒரு விண்ணப்பதாரி U – 17/ U – 19 அல்லது விளையாட்டில் தேசிய வர்ணவிருது அல்லது சனாதிபதி சாரணியம் / பிரதம மந்திரி சாரணியம்/ சனாதிபதி வழிகாட்டி/ பிரதம மந்திரி வழிகாட்டி/ கீழ் பயிலிளவல் அதிகாரிகள் (சிரேஸ்ட/ கனிஸ்ட) / பயிலிளவல் சார்ஜன் நிலைகளிலொன்றைக் கொண்டிருந்தால் முகாமைத்துவ சபை ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் இறுதி நேர்முகப்பரீட்சை குழுவினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்.

  ஒரு விண்ணப்பதாரி தேசிய மட்ட விளையாட்டில் U – 17/ U – 19 அவர் பின்வரும் வகையில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

  தனிநபர் போட்டி - முதல்/இரண்டாம்/ மூன்றாம் இடங்கள்
  குழுநிலைப் போட்டி - வெற்றியாளர் / இரண்டாம் இடம்

* க.பொ.த உயர்தர பரீட்சையில் ஒரு விண்ணப்பதாரி 1.80 அல்லது அதற்கு மேல் நியமப்புள்ளிகளை (Z-Score) கொண்டிருந்து MBBS அல்லது பொறியியல் கற்கைக்கு விண்ணப்பித்தால் ஆண்களினது உயரம் 5'4" அல்லது அதற்கு மேலெனவும் பெண்களது உயரம் 5' 2" அல்லது அதற்கு மேலெனவும் தளர்த்தப்படும்.

* ஒரு விண்ணப்பதாரி அந்தந்த சேவைகளால் நிர்ணயிக்கப்பட்ட பார்வைக் கூர்மை சான்றுகளின் விவரக்குறிப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

e. **பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும்** - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவரின் திருப்திக்கு ஏற்ப கொடுக்கப்பட்ட மாதிரிக்கமைய உடல்நலச் சான்றுரை படிவத்தை சமர்ப்பித்ததன் பின்னர், மருத்துவ சோதனையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால், அவர் தகுதியற்றவராக்கப்படுவதுடன் பொய்யான தகவல்களை வழங்கியமை எனும் விதியின் கீழ் தண்டனைக்குரியவராவார். மருத்துவப் பிரகடனப் படிவத்தை பல்கலைக்கழக இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம் https://.kdu.ac.lk

5. **சேவை நிபந்தனைகள்**.- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாக பயிலிளவல் (Officer Cadets) அதிகாரிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டவர்கள்.

மருத்துவ (MBBS) பட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட கெடெற் அதிகாரிகள் / மாணவ பொலிஸ் அதிகாரிகள் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட தினத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான (20) இருபது வருட சேவையை அவர்கள் அமர்த்தப்படுகிற படைத்துறைக்கு சேவையாற்ற வேண்டும்.

ஏனைய பட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட கெடெற் அதிகாரிகள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் சேவையில் அதிகாரி பதவிக்கு அமர்த்தப்பட்ட தினத்திலிருந்து தொடர்ச்சியானதும் இடையறாததுமான பன்னிரண்டு (12) வருடங்களுக்கு குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும்.

கல்விக் காலத்தில் மருத்துவ பின்னணி மற்றும் ஏனைய காரணிகளின் நிமித்தம் வெளியேற்றப்படும் கெடெற் அதிகாரிகளுக்கு பட்டம் வழங்கப்பட மாட்டாது.

6. பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படும் நேரத்தில் பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. கெடெற் அதிகாரிகளுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ. 80,000.00 கொண்ட சம்பளமும் கொடுப்பனவும் (உணவு கொடுப்பனவு அடங்கலாக) கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக கட்டணமின்றி பின்வரும் வசதிகளும் வழங்கப்படும்.

1. உணவு மற்றும் தங்குமிடம்
2. சீருடைகள்
3. அதிகாரியின் வேலையாள் வசதிகள்
4. விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
5. மருத்துவ வசதிகள்

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படைகளின் கிரமமான சேவை மற்றும் சேவைக்கு இணைக்கப்படுமிடத்து, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் கொடுப்பனவும் அவர்களுக்கு வழங்கப்படும்.

(அ) பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்:

(i) தகைமைக் கொடுப்பனவு;
(ii) உணவுக் கொடுப்பனவு;
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி;
(திருமணமான அதிகாரிகளுக்கு மட்டும்)
(iv) சீருடை பராமரிப்புப் படி

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும்:

(i) உள்ளே வாழுமாறு கட்டளையிடும்போது இலவச தங்குமிடவசதி;
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப் படி
(iv) திருமணமாகாத அதிகாரிகளுக்கான வேலையாள் கொடுப்பனவும் திருமணமான அதிகாரிகளுக்கான வேலையாள் சேவைகளும்.

9. இராணுவம் /கடற்படை /விமானப்படை உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு மற்றும் சேவை நிபந்தனைகள் பின்வரும் விதிமுறைகளால் கையாளப்படும்.:

(i) தரைப்படை/கடற்படை/விமானப்படை உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு சட்டக்கோவை;
(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப்படை/ உத்தியோகத்தர் களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்;
(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப் படையின் நடை முறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சி காலத்தின் போது உபவேந்தர் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளால் பரிந்துரைக்கப்படும் பயிற்சிகளை கெடெற் அதிகாரிகள் பெற வேண்டும்.

11. பயிற்சியின் கீழுள்ள கெடெற் அதிகாரிகள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்படலாம்.

12. பயிற்சிபெறும் கெடெற் அதிகாரிகள் வழங்கப்படும் தங்குமிடங்களில் தங்கி, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் வகுக்கப்பட்ட வழக்கமான நடைமுறைளைப் பின்பற்ற வேண்டும்.

13. **மொழித் தேவைப்பாடுகள்** - தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே உருவாக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் உருவாக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க வேண்டும்.

14. **ஆளடையாளத்தை நிரூபித்தல்**.- விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகன பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

15. **விண்ணப்பங்கள்** – https://kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

(i) நீங்கள் https://kdu.ac.lk எனும் இணையத்தளத்திற்கு சென்று இணையநிலையிலேயே விண்ணப்பிக்க வேண்டும். உங்களது வசதிக்காக பல்கலைக்கழக இணையத்தளத்தில் விண்ணப்ப செயல்முறை விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்ப படிவத்தைப் பூர்த்தி செய்ய பல்கலைக்கழக இணையத்தில் உள்ள வழிமுறைகளை பின்பற்றவும். தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ii) விண்ணப்ப செயலாக்க கட்டணமாக விண்ணப்பதாரிகள் ஒரு பட்டப்படிப்பிற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,500.00 (Sri Lanka Rupees) செலுத்த வேண்டும். ஏந்தவொரு விண்ணப்பதாரரும் இணையத்தளத்தின் ஊடாக வைப்புச்செய்ய முடியாத பட்சத்தில் 'உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்' இலங்கை வங்கி, கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் '9405831' இற்கு எந்தவொரு இலங்கை வங்கியின் கிளையிலும் ரூபா 1,500.00 (ஆயிரத்து ஐந்நூறு ரூபா) தொகையினை வைப்பு செய்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து குறித்த முகவரிக்கு பதிவுத் தபாலில் முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

16. அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் முறையாக நிரப்பப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது.

உபவேந்தரால் நியமனம் செய்யப்பட்ட தெரிவுக் குழு பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் மதிப்பாய்வு செய்து விண்ணப்பதாரரின் தகுதிக்கு ஏற்ப தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட ஆன்லைன் விண்ணப்பங்கள் KDU இணையதளம் மூலம் 16.07.2023 அல்லது அதற்கு முன் அனுப்பப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

17. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத்தாபன/நிலைய தலைவரினூடாக ஆன்லைன் மூலமாக சமர்ப்பிக்கவேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து எப்போது விடுவிப்புச்செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

18. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களை கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற அதிகாரிகள் தர சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்ளப்படுவார்கள். இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதி சபையினால் மேற்கொள்ளப்படும்.

19. நேர்முகப் பரீட்சைகளுக்கும் அதிகாரிகள் தர சோதனைகளுக்கும் தெரிவு செய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன பல்கலைக்கழக இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

20. அதிகாரிகள் தராதர சோதனை/இராணுவ பயிற்சி என்பவற்றில் ஈடுபடும்போது ஏற்படும் காயம் முதலான எந்தவொரு பாதிப்பிற்கும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொறுப்பல்ல என்பதுடன் எந்தவொரு விண்ணப்பதாரியும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திடம் எந்தவொரு நஸ்ட ஈடும் கோரமுடியாது அல்லது இலங்கை அரசாங்கத்திடமும் இச்சோதனைகளின் போது ஏற்படும் இழப்புக்களுக்கு நஸ்டஈடு கோர முடியாது.

21. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். தேருநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாக கருதப்படும்.

22. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இப்பல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

23. வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வு),
WWV RWP RSP USP ndc psc MPhil
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

09-513

## இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரித்த விண்ணப்பங்களை கல்வித் தகைமை, உயர் கல்வித் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். (இந்த வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.)

1. **பாராளுமன்ற உத்தியோகத்தர் பதவி (தமிழ்)**

1.1 **சம்பள அளவுத்திட்டம்** :

2016.11.07 ஆந் திகதிய 06/ 2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 34,605-9×660-3×755- ரூபா 42,810 (அனைத்து மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 78,000) ஆகும்.

1.2 **வயதெல்லை.**- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான உச்ச வயதெல்லை 45 வயதாகும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

1.3 **கல்வித் தகைமைகள்**:

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து பட்டத்தை பெற்றிருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா./ த.) பரீட்சையில் தமிழ் மொழி, ஆங்கிலம்/ ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகள் அடங்கலாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

1.4 **ஆட்சேர்ப்பு முறை**:

விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**குறிப்பு** : தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமனம் பெற்று ஒரு வருட காலப் பகுதியினுள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் சொல் செயலாக்கம் (Word Processing) பற்றிய பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இந்தப் பரீட்சையில் 25 நிமிடங்களுக்குள் தமிழ் மொழியில் 150 சொற்கள் அடங்கிய ஒரு ஆவணத்தையும் 25 நிமிடங்களுக்குள் ஆங்கில மொழியில் 250 சொற்கள் அடங்கிய ஒரு ஆவணத்தையும் தயாரிக்கக்கூடிய ஆற்றலை பெற வேண்டும்.

2. **உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்**

2.1 **தொழிலின் தன்மை** :

- ஆராய்ச்சிகளின் உரிய தரவுகளையும், தகவல்களையும் சேகரித்து தரவுத்தளம் ஒன்றைப் பேணுதல்.
- பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் சட்டமூலங்கள் தொடர்பான பின்னணி அறிக்கைகளை தயாரித்தல்.
- ஆராய்ச்சி செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரவுப் பத்திரங்களிலிருந்தும் மற்றும் புள்ளிவிபரங்களிலிருந்தும் தகவல்களை பிரித்து இணைப்பிரதிகளை தயாரித்தல்.
- ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்.
- ஆராய்ச்சி செயற்பாடுகளுக்குரிய பல ஆராய்ச்சி ஆவணங்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து பொருத்தமான தகவல்களை பிரித்தெடுத்தல்.
- தேசிய மற்றும் சர்வதேச ஆயம், சஞ்சிகை, இதழ்கள் மற்றும் செய்திப்பத்திரிகைகள் ஆகியவற்றுக்கான ஆராய்ச்சிப் பத்திரங்களை தயாரிக்கும் போது ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கு உதவுதல்.

2.2 **சம்பள அளவுத்திட்டம்** :

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இன் பிரகாரம் இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 40,545-12×755- ரூபா 49,605.00 (அனைத்து மேலதிகக் கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 87,000) ஆகும்.

2.3 **வயதெல்லை**:- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

2.4 **கல்வித் தகைமைகள்**:

(i) பொறியியல், சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், சட்டம், முகாமைத்துவம், புள்ளி விபரம் ஆகிய பாடங்களில் ஒன்று தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகரித்த ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து விஷேட பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா./த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

2.5 **அனுபவம்**:

மேற்குறித்த தகைமைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் அரசாங்க சேவையில்/அங்கீகரிக்கப்பட்டவொரு நிறுவனத்தில் ஆராய்ச்சி விடயம் தொடர்பாக மூன்று வருட கால அனுபவத்தை பெற்றிருத்தல்.

2.6 **ஆட்சேர்ப்பு முறை**:

விண்ணப்பதாரர்கள் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

3. **சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும்**:

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. இந்தப் பதவிகளுக்குரிய ஓய்வூதிய சம்பள அளவுத்திட்டம் பற்றி அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் இயைந்தொழுக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். உள்வாரி விண்ணப்பதாரர் அல்லது ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அத்தகைய நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள்/ தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

4. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;

(இ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

5. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்க கூட்டுத் தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்கள / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

6. இப் பதவியை பெற்றுக் கொள்வதற்காக ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இப் பதவிக்கான தகைமையீனமாக கருதப்படும்.

7. விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது ஒரு விபரம் பொய்யானது என ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால் அவர் தகுதியற்றவராவார் எனக் குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

8. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள /நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

கசுனி ரோஹனதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2023, செத்தெம்பர் 25.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

............................................................ பதவி

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ..........................................................................................

(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..........................................................................................
..........................................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு./திருமதி/செல்வி): ..........................................................................................
..........................................................................................

02. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: | | | | | | | | | | | | |

03. (அ) தனிப்பட்ட முகவரி:..........................................................................................
..........................................................................................
..........................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | | |

(ஆ) அலுவலக முகவரி: ..............................................................................................................................................

..............................................................................................................................................................

தொலைபேசி இலக்கம்: | | | | | | | | | |

(இ) தயவுசெய்து பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்பி வைக்க வேண்டிய முகவரியைக் குறிப்பிடுக.

தனிப்பட்ட ☐ அலுவலக ☐

04. (அ) பிறந்த திகதி: ............................................

(பிறப்புச் சான்றிதழின் ஒரு பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

(ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது: வருடங்கள்: ........ மாதங்கள்: ........ நாட்கள்: ..........

05. விவாகமானவரா/விவாகமாகாதவரா?: (விவாகமானவர்/விவாகமாகாதவர்)

06. பால்நிலை: (ஆண்/பெண்)

07. இலங்கைப் பிரசையா: (ஆம்/இல்லை)

08. கல்வித் தகைமைகள்: (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

க. பொ. த. (சா./த.)

| பாடம் | பெற்ற சித்திகள் | ஆண்டு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

09. உயர் கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

பல்கலைக்கழகம் :..............................................................................................................................................

பட்டமும் பெற்ற ஆண்டும் : ..................................................................................................................................

10. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) :

| நிறுவனம் | பதவி | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |
| | | |

11. தொழில் பற்றிய விபரங்கள்:

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..............................................................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : .................................................................................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ............................................................................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம் : ........................................................................................................................

(உ) கொடுப்பனவுகள் : ..........................................................................................................................................

(ஊ) முழு மொத்த சம்பளம் : ..................................................................................................................................

12. ஒரு நீதிமன்றத்தில் ஒரு குற்றவியல் குற்றத்திற்கு குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

....................................................................................................................................................................

..............................................................................................................................................................

13. இதற்கு முன்னர் நீங்கள் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களை குறிப்பிடுக:

....................................................................................................................................................................

..............................................................................................................................................................

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் ஏதும் பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடுகள் ஏதுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

.............................................................

திகதி:................. விண்ணப்பதாரரின் கையொப்பம்

-----------------------------------------------------------------------------------------------------------------

**திணைக்கள /நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

(அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ............................................................................................................................... பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................................................................ அவர்களின் விண்ணப்பத்தைசிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரது வேலையும் மற்றும் நடத்தையும் திருப்திகரமானது எனவும் இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இப்பதவிக்கு இவர் தெரிவு செய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்பட மாட்டார் (தயவுசெய்து பொருத்த மற்ற சொற்களை நீக்கிவிடவும்).

.............................................................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரை)

திகதி:.....................

09-596

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2023)

இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2023, திசெம்பர் மாதம் நடைபெறும் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.

2. இந்தப் பரீட்சைக்குரிய பாடபரிந்துரை மற்றும் மற்ற விதிமுறைகள் இலக்கம் 1928/28 மற்றும் 2015.08.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. வசதிக்காக அந்த பாட பரிந்துரை மற்றும் ஏனைய விதிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

3. பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|
| I. பொது நிருவாகம் | 03 மணிநேரம் | 100 | 40 |
| II. நிதி ஒழுங்குவிதிகள் | 03 மணிநேரம் | 100 | 40 |
| III. கல்விச் சட்டம் நிர்வாகம் மற்றும் மதிப்பீடு | 03 மணிநேரம் | 100 | 40 |

4. பரீட்சை நடாத்தும் அதிகாரி : பரீட்சை ஆணையாளர் நாயகம்

5. பரீட்சைக்கான பாட பரிந்துரை

| வினாத்தாளின் பெயர் | பாட பரிந்துரை |
|---|---|
| I. பொது நிர்வாகம் | (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் அதற்கு முன் நிலவிய 1972 மற்றும் 1947 அரசியலமைப்பு.<br>• சிறுவர் உரிமைகள் பிரகடனம்<br>• மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்<br>• இலஞ்ச மற்றும் ஊழல் சட்டம்<br>(ஆ) அலுவலக மற்றும் துறை அபிவிருத்தி முறை மற்றும் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் (காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்களும் உள்ளடங்களாக) VII, IX, X, XVI, XXV, XXVI, XXVII, XXIX, XXXI, XXXII, XLVII, XLVIII<br>(இ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல்முறை நடைவிதி சட்டங்கள். |
| II. நிதி ஒழுங்குவிதிகள் | (அ) அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் (I ஆம் அத்தியாயம் தவிர/ காலத்திற்கேற்ப மேற்கொள்ளப்படும் திருத்தங்களும் உள்ளடங்கலாக)<br>(ஆ) மாற்றப்பட்ட ஆண்டின் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடு, எ. கா- அவற்றின் அமைப்பு, வருமான தலைப்பு, நிதி மற்றும் ஒதுக்கீடு சட்டங்கள்<br>(இ) கல்வி அலுவலகம் மூலமாக நிறைவேற்றப்படும் நிலையான கணக்கு நடவடிக்கைகளுக்குரிய பிரகடன சட்டங்கள் மற்றும் ஏற்றும் சட்ட பிரகடனங்கள். |
| III. கல்விச் சட்டம் நிர்வாகம் மற்றும் மதிப்பீடு | (அ) கல்விக்குரிய சட்டத்தின் விதிமுறைகள்<br>• 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க கல்வி பிரகடனம்<br>• 1947 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்த மசோதா<br>• 1951 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க திருத்த மசோதா<br>• 1953 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க திருத்த மசோதா<br>• அரச பாடசாலைகள் தொடர்பான பிரமாணக் குறிப்பு |

| வினாத்தாளின் பெயர் | பாட பரிந்துரை |
|---|---|
| | • 1960 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டம்<br>• 1961 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் (மேலதிகள் விதிகள்) திருத்தச் சட்டம்<br>• 1973 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கல்வி (பதவி பெயர்களை மாற்றும்) சட்டம்<br>• 1981 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்டம்<br>• 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக சட்டம்<br>• 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுத் தேர்வுகள் சட்டம்<br>• 1986 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கல்வியியற் கல்லூரி சட்டம்<br>• தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை (தேர்வை அண்மித்த மூன்று வருடங்களுக்குள்)<br>• வசதிகள் மற்றும் சேவைக் கட்டணம்<br>• பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கங்களுக்குரிய சுற்றறிக்கைகள்<br>(ஆ) கல்வி நிருவாகம்<br>1. (i) கல்வி அமைச்சு<br>(ii) மாகாண கல்வித் திணைக்களங்களும் உள்ளடங்கலாக அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் மற்றும் கல்வி அமைச்சின் ஏற்பாடுகள் மற்றும் பணிகள்<br>(iii) தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் கல்வித் திட்டமிடல்கள் மற்றும் பொது நோக்கங்கள் (பாடசாலை அமைப்புகள் உட்பட) செயல்படுத்தல் போன்றவை<br>2. பாடசாலை முகாமைத்துவம் மற்றும் பாடசாலை சமூக உறவுகள்<br>3. கல்வி முகாமைத்துவ தகவல் அமைப்பு (EMIS)<br>4. சிறப்பு கல்விச் செயற்றிட்டங்கள், முறைசாரா கல்வி நடவடிக்கைகள், பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவம்.<br>(இ) மதிப்பீடு<br>• ஆசிரியர்களின் செயலடைவை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் எடுத்துக்காட்டுகள்.<br>• பாடசாலை அடிப்படையிலான மதிப்பீடுகள்<br>• பாடசாலைகளில் சுய மதிப்பீட்டு செயற்றிட்டங்கள்<br>• வலயக் கல்வி அலுவலகம், மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் கல்வி அமைச்சின் மூலமாக பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் வெளிப்புற குழுக்களால் உள்ளக மதிப்பீட்டை கண்காணித்தல் (கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட கையேடுகள் மற்றும் பிற வெளியீடுகள் தொடர்பாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படும்.) |

க. வே.: மூன்று வினாத்தாள்களும் குறுகிய மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களை கொண்டதாகும்.

6. அலுவலர் ஒருவருக்கு I ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரிசோதனைக்கு குறிப்பிட்ட பாடங்கள் தொடர்பாக ஒரே நேரத்தில் அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோற்றலாம்.

7. **பரீட்சையின் மொழிமூலம்.-**

I. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழி மூலங்களில் நடைபெறும்;
II. பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்;
III. பரீட்சார்த்தி அரச சேவையில் இணைந்து கொள்வதற்காக தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழி மூலம் அல்லது போட்டிப் பரீட்சையின்றி அரசாங்க சேவையில் இணைந்துள்ளவர்கள் தொடர்பாக அரசாங்க சேவையில் இணைவதற்கு தகைமைப் பெற்ற பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலத்தில் பதில் எழுதலாம்.

8. பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தகுதி இல்லாத மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதாகக் கண்டறியப்பட்டால் அவரின் கோரிக்கை நிராகரிக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு கோரும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. விண்ணப்பங்கள் பின்வரும் வடிவத்தில் A4 அளவிலான தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் பந்திகள் இல. 01 முதல் 06 வரையிலும் மீதமுள்ளவற்றை இரண்டாவது பக்கத்திலும் குறிப்பிடவும்). சிங்கள விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பத்தில் பரீட்சையின் பெயர் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும். தேர்வை தமிழ் தவிர ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். உரிய தகவல்களைத் தெளிவாக சொந்தக் கையெழுத்தில் எழுத வேண்டும். மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துப்போகாத விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்கள் முன்னறிவிப்பு இல்லாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நகல் பிரதியொன்றை தம்மிடம் வைத்துக்கொள்வது நன்மையாக அமையும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பம் தேர்வு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துப்போகிறதா என்பதை விண்ணப்பதாரர் சரிபார்க்க வேண்டும். பொருந்தாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது குற்றமாக கருதப்படும்.

10. **பரீட்சை பெறுபேறுகள்.-**

i. பரீட்சை நடத்துவது மற்றும் முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் முடிவு இறுதி முடிவாகும்.
ii. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளின் முடிவுகள் உள்ளடக்கப்பட்ட பெறுபேறு ஆவணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

11. விண்ணப்பப்படிவங்கள் 2023.10.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சை ஒழுங்கமைப்புக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ.இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு கிடைக்கும்படி திணைக்களத் தலைவரின் ஊடாக பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்னதாகவோ தேர்வுக் கட்டணம் செலுத்துதல் பொருந்தும் எனில், அதற்குரிய தேர்வுக் கட்டணம் செலுத்தி பெறப்பட்ட ரசீதுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம், விண்ணப்பதாரரின் கையொப்பம், திணைக்களத் தலைவரின் சான்றிதழுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை முன்னிலைப்படுத்திய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் அது தொடர்பான அறிவிப்பு செய்தித்தாள்களிலோ அல்லது திணைக்களத்தின் இணையத்தளத்திலோ வெளியிடப்படும். அறிவிப்பு வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களுக்குப் பிறகும் விண்ணப்பதாரர் அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தின் சான்றழிக்கப்பட்ட நகல் பிரதிகள், பணம் செலுத்திய ரசீது மற்றும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட விண்ணப்பத்துடன் அவர்களிடம் உள்ள விண்ணப்பத்தில், பணம் செலுத்தி பெறப்பட்ட ரசீதின் மற்றும் விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் முன்னிலைப்படுத்தப்பட்ட ரசீதின் உறுதிசெய்யப்பட்ட நகல் பிரதியுடன் அந்த கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே உள்ள பகுதியைச் சேர்ந்தவர் என்றால், அனுமதி அட்டையை அனுப்புவதற்காக தொலைநகல் எண்ணை குறிப்பிட வேண்டும்.

13. மேலே 12 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

14. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் அனைத்து பாடங்கள், தொடர்பாக மண்டப அதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் பரீட்சார்த்திகள் தங்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காமல் தேர்வு அறைக்குள் நுழைய வேண்டும். அத்துடன் தங்கள் ஆளடையாளத்தை நிரூபிக்க மறுக்கும் விண்ணப்பதாரர்கள் தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்த தருணத்திலிருந்து, பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை, பரீட்சை அதிகாரிகள் அவரை அடையாளம் காணும் வகையில் விண்ணப்பதாரர் முகம் மற்றும் இரண்டு காதுகளை மறைக்காமல் இருக்க வேண்டும்.

15. பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் பரீட்சைக் கட்டணத்தை பின்வரும் அடிப்படையில் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. உரிய பரீட்சைக் கட்டணம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருவாய் தலைப்பு 20-03-02-13 இல் வைப்பிலிடும் வகையில் நாட்டில் உள்ள ஏதேனும் தபால் /உப தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெறப்படும் ரசீதை விண்ணப்பத்தில் குறிப்பிட்ட இடத்தில் ஒரே நிரலில் மாத்திரம் இருக்கும் வகையில் ஒட்ட ஏற்பாடு செய்யவும். (ரசீதின் நகல் ஒன்றை தம்மிடம் வைத்திருப்பது உதவியாக இருக்கும்.)

(அ) முதற் தடவை (முழுப்பரீட்சை க்கு அல்லது ஒரு பகுதிக்காக) கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
(ஆ) அதன் பின்னர் -

| | |
|---|---|
| முழுப்பரீட்சைக்காக | ரூ. 1,200.00 |
| ஒரு பாடத்திற்கு | ரூ. 600.00 |

16. I. ஒரு விண்ணப்பதாரருக்கு தேர்வுச் சீட்டு வழங்குவது, அவர் தேர்வில் தோற்றுவதற்குத் தகுதிபெற்றதாகக் கருதப்படக் கூடாது.

II. பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள பரீட்சைகள் விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்பட்டவர்கள். இந்த விதிகளை மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் பொறுப்பாவார்.

17. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றினால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூலம் அறிவிப்பிற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

18. இந்த அறிவித்தலின் மூலமாக தழுவப்படாத எந்தவொரு விடயம் குறித்து முடிவெடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரை சார்ந்ததாகும்.

எம். என். ரணசிங்க,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
பத்தரமுல்ல,
இசுருபாய,
2023, செத்தெம்பர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக பயன்பாட்டுக்கு மாத்திரம்)

## இலங்கை கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2021 (2023)

## FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR OFFICERS OF THE SRI LANKA EDUCATION ADMINISTRATIVE SERVICE - 2021 (2023)

அலுவலர் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 (உரிய எண்ணை கட்டத்திற்குள் எழுதவும்.)

(பரீட்சையின் பெயர் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.)

1. I. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
உதாரணம் : HENAGE DON SHIRAL GAYANTHA GUNASEKARA
………………………………………………………………………………………………
II. இறுதியில் வரும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்னரும் பாவித்து பெயரை (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ-ம் :
உதாரணம் : GUNASEKARA H. D. S. G.
………………………………………………………………………………………………

II. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………………
…………………..

2. முகவரி :
I. பரீட்சை அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :
………………………………………………………………………………………………
II. அலுவலக முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :…………………………………………………………….
III. தனிப்பட்ட முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :………………………………………………………………….

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. பால் : ஆண்/பெண்
ஆண் - 0
பெண் - 1
(உரிய எண்ணை கட்டத்திற்குள் எழுதவும்.)

5. கையடக்கத் தொலைபேசி இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. அறிவித்தலில் 03 ஆம் பந்தியின் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பாட எண்ணுடன் தோற்றும் பாடங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

| பாடங்கள் | பாட எண் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

7. பிறந்த வருடம் : வருடம்: | | | | | மாதம் : | | | திகதி : | | |

8. பதவிப் பெயர்: ...............................................

9. திணைக்களம்/வலயக்கல்வி அலுவலகம்/கோட்டக்கல்வி அலுவலகம்/பாடசாலை : ............ ................................ ..............................................................................

10. இந்தப் பரீட்சைக்கு முன் முழுமையாகவோ அல்லது ஒரு பகுதிக்கேனும் தோற்றியிருப்பின், அவ்வாறு தோற்றிய வருடம், பாடம் மற்றும் மொழி மூலத்தை குறிப்பிடவும் :

| வருடம் | பாடம் | மொழிமூலம் |
|---|---|---|
| ......... | ............... | ............... |
| ......... | ............... | ............... |

11. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :
(i) பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட தபால் நிலையம் :.......................................
(ii) பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :.......................................................
(iii) செலுத்தப்பட்ட பணம் :.....................................................................

| பணம் செலுத்திய பின்னர் பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். (நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளவும், தேவையானால் மாத்திரமே) |
|---|

மேற்படி தகவல்கள் உண்மையெனவும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் உரிமை உள்ளது எனவும். பரிட்சை தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உடந்தையாவேன் எனவும் தெரிவிக்கின்றேன். மேலும் பரீட்சை நடத்துவது தொடர்பில் மற்றும் முடிவுகளை வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் உடந்தையாவேன் என தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : ................

.......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

இந்த விடயம் தொடர்பான பரீட்சார்த்திக்கு இந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகள் உள்ளதெனவும், விண்ணப்பத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தில் தோற்றுவதற்கு தகைமை உள்ளதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மேலே ஒட்டப்பட்டுள்ளது என்பதனை தெரிவிக்கின்றேன். (*)

திகதி: ................

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :......................
பதவி :.................
அலுவலக முகவரி :.....................
(பதவி முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்.)

(*) கட்டணம் செலுத்தும் தேவை ஏற்படாவிடின் வெட்டிவிடவும்.

09-521

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.